உடனடி வெளியீட்டுக்காக

# நகரின் Nurturing Neighbourhoods (நர்ச்சரிங் நெய்பர்ஹூட்ஸ்) திட்டம் 2022 ஆண்டிலும் திரும்ப வருகிறது

ப்ராம்ப்ட்டன், ON (ஆகஸ்ட் 4, 2022) – ப்ராம்ப்ட்டன் நகரின் Nurturing Neighbourhoods திட்டமானது ஆகஸ்ட் 9, 2022 செவ்வாய்க்கிழமை திரும்பவும் வரவிருக்கிறது.

Nurturing Neighbourhoods திட்டமானது, பொதுமக்களை ஈடுபடுத்தி, தங்களின் அக்கம் பக்கம் இருக்கும் சுற்றுப்புறங்களை மேம்படுத்துவதில் செயல்பாடு மிக்க பங்காற்றலுக்கு குடியிருப்புவாசிகளுக்கு அதிகாரமளித்து, அதற்கான ஆதாரவளங்களோடு அவர்களை இணைக்க இலக்கு கொண்டுள்ளது. குடியிருப்புவாசிகள் தங்கள் அண்மையிலிருக்கும் சுற்றுப்புறங்கள் பற்றி தெரிந்துகொண்டு அதில் தங்களுக்கு எது முக்கியமானதோ அதைப் பகிர்ந்துகொள்ள மூன்று வழிகள் உள்ளன:

- Neighbourhood நடைப்பயிற்சிகள் – ப்ராம்ப்ட்டன் நகரம் முழுக்கவுமாக ஐந்து நடைப்பயிற்சிகள் மற்றும் பணிப்பட்டறைகளுக்கு ஏற்பாடு செய்யப்படும்: ஃப்ளேட்ச்சர்'ஸ் மெடோ (Fletcher's Meadow) N/S மற்றும் வான் கிர்க் (Van Kirk), லுண்டி வில்லேஜ் (Lundy Village) மற்றும் ஃப்ளெட்ச்சர்ஸ் க்ரீக் (Fletcher's Creek), ப்ரமீலி ஜி-செக்ஷன் (Bramalea G-Section), கேஸ்ஸ்ல்மோர் எஸ்டேட்ஸ் (Castlemore Estates) மற்றும் வைட்ஃபீல் ( Wildfield), மற்றும் ஷெரிடான் (Sheridan).
- மெய்நிகர் சுற்றுலாக்கள் – இதில் பத்து மெய்நிகர் சுற்றுலாக்கள் இருக்கும்; ப்ராம்ப்ட்டன் ஊடாக இருக்கின்ற அண்மை சுற்றுப்புற ரத்தினக் கற்கள் போன்ற இடங்களை எடுத்தியம்புவதாக இது இருக்கும்.
- Neighbourhood கருத்தாய்வு – சமூகத்தினர் குடியிருக்கும் சுற்றுப்புறங்களையும் குடியிருப்பாளர்கள் அவர்களுக்குள் எவ்வாறு தொடர்பு கொள்கிறார்கள் என்பதையும் நகரம் புரிந்துகொள்ள விரும்புகிறது; அனைவரும் ஆன்லைன் கருத்தாய்வில் கலந்துகொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள்
- ஆன்லைன் மேப்பிங் கருவி - இந்த கருவி குடியிருப்பாளர்கள் தாங்கள் விரும்பும் இடங்கள், கவலைகள் மற்றும் நகரத்தில் பார்க்க விரும்பும் மாற்றங்களை அடையாளம் காட்ட உதவும்.

ப்ராம்ப்ட்டன் குடியிருப்பாளர்கள் பரிசுகளை வெல்வதற்கான வாய்ப்பிற்காக, தங்களுக்குப் பிடித்த அருகாமையில் உள்ள ரத்தினங்கள் போன்ற இடங்களை எடுத்தியம்பும் வகையில் ஒரு சிறிய

வீடியோவைப் பகிர்ந்து கொள்ள அழைக்கப்படுகிறார்கள்! ஆகஸ்ட் 14 ஆம் தேதிக்குள் உங்களுக்குப் பிடித்த உள்ளூர் இடங்களை நகர நிர்வாகத்திற்குத் தெரியப்படுத்துங்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட வீடியோக்கள் இந்த ஆண்டு திட்டத்தில், காட்சிப்படுத்த இடம்பெறும்! வீடியோக்களை ஆன்லைனில் www.brampton.ca/communitysafety எனும் வலைப்பக்கத்தில் சமர்ப்பிக்கலாம்.

சமுதாயத்தில் உள்ள அனைவரும் அணுகக்கூடிய இலவசமான, தரமான, நிகழ்ச்சி நிரலாக்கத்தை வழங்குவதற்கான நகரத்தின் முயற்சிகளுக்கு நிதியாதாரம் அளிப்பவர்கள் ஆதரிக்கிறார்கள். Nurturing Neighbourhood திட்டத்திற்கு Alectra மற்றும் Enbridge Gas நிறுவனங்கள் மீண்டும் தாராளமாக நிதியாதாரம் அளித்துள்ளனர்.

Nurturing Neighbourhoods பற்றிய மேலும் தகவல்களுக்கு மற்றும் neighbourhood நடைப்பயிற்சிகள் பற்றிய மெய்நிகர் நிகழ்ச்சிகள் பற்றிய முழு பட்டியலுக்கு வருகை தரவும்: www.brampton.ca/communitysafety.

**2021 நிகழ்ச்சி**

ப்ராம்ப்ட்டன் முழுவதும் உள்ள 15 அண்மை சுற்றுப்புறங்களில் ப்ராம்ப்ட்டன்வாசிகளை ஈடுபடுத்தவும், குடிமக்கள் சமூகக் கட்டமைப்பை ஊக்குவிக்கவும், நகர நிர்வாகம் கடந்த ஆண்டு தணிக்கை செய்தது. 2021 இல் 1300 க்கும் மேற்பட்ட குடியிருப்பாளர்கள் தங்கள் சமூகத்திற்கு நல்லுருவம் கொடுப்பதில் Nurturing Neighbourhoods திட்டத்தின் மூலம் செயல்பாடுமிக்க பங்கு வகித்தனர். கருத்தாய்வு மூலம் நகரம் 900 க்கும் மேற்பட்ட பதில்களைப் பெற்றது, மேலும் ஆன்லைன் மேப்பிங் கருவியில் 450 க்கும் மேற்பட்டவர்கள் பின்குத்துதல் செய்து இடம் காட்டினர். 2021 பற்றிய மேலும் முடிவுகளுக்கு வருகை தரவும்: www.brampton.ca/communitysafety.

**அறிஞர் கூற்றுக்கள்**

"அண்மையில் இருக்கும் சுற்றுப்புறங்கள் என வரும்போது அவற்றை ப்ராம்ப்ட்டன் குடியிருப்புவாசிகள் தங்கள் வீடாகவே கருதக்கூடிய வல்லமை கொண்டவர்கள்; மேலும் அவர்கள் நமது நகரத்தில் எதை விரும்புகிறார்கள் மற்றும் அவர்கள் எதை மாற்ற விரும்புகிறார்கள் என்பதில் அவர்களின் உள்ளீடு விலைமதிப்பற்றது. ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான நகரமாக இருக்கும் ப்ராம்ப்ட்டனில், அனைத்து ப்ராம்ப்ட்டன்வாசிகளும் தங்கள் அண்மைச் சுற்றுப்புறங்களில் பாதுகாப்பாக இருப்பதாக உணர வேண்டும், அந்த இடம் தமக்கும் சொந்தம் என்ற உணர்வு கொண்டபடி, தங்கள் சமூகத்தில் தீவிரமாக பங்கேற்கும் வாய்ப்பைப் பெற வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். கடந்த காலங்களில் Nurturing Neighbourhoods திட்டத்தில் பங்கேற்றவர்களுக்கு நன்றி, மற்றும் அதன் பேரில், நமது குடியிருப்பாளர்களுடன் மீண்டும் ஈடுபட்டு கற்றுக்கொள்ள ஆவலுடன் காத்திருக்கிறோம்."

*- பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் நகரை நமது குடியிருப்பாளர்கள் அனைவரும் பெருமையுடன் தன்னுடைய வீடு என்று அழைக்கும் வகையில் நகரத்தை உருவாக்க உறுதிபூண்டுள்ளது. இந்த ஆண்டு ப்ராம்ப்ட்டன்வாசிகள் Nurturing Neighbourhoods திட்டப் பகுதிகளை நேரில் சுற்றிப் பார்க்கவும், ஆன்லைனில் அல்லது நாங்கள் திட்டம் வகுத்து கொடுத்திருக்கும் நடைப்பயிற்சிகளில் தங்கள் உள்ளீட்டை வழங்கவும், பரிசு வெல்வதற்கான வாய்ப்பிற்காக தங்களுக்குப் பிடித்த அருகாமையில் உள்ள ரத்தினக்கற்களாக கருதும் இடங்களை குறுகிய வீடியோ எடுத்து பகிர்ந்து கொள்ளவும், அழைக்கப்படுகிறார்கள்! உங்கள் கருத்துக்கள் ஒரு பொருட்டாகின்றன, மேலும் நிலைத்து நிற்கவல்ல மற்றும் அனைவரையும் அடக்கிய சமூகங்களை உருவாக்க எங்களுக்கு உதவுவதில் நீங்கள் முக்கிய பங்கு வகிக்கிறீர்கள்."

*- ரொவீனா சான்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர், வார்டுகள் 1 & 5; தலைவர், சமுதாய சேவைகள் துறை, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"Nurturing Neighbourhoods திட்டமானது, ப்ராம்ப்ட்டன் குடியிருப்பாளர்கள் தங்கள் சமூகத்தில் தாங்கள் விரும்பும் விஷயத்தைப் பகிர்ந்து கொள்ளவும், வரவிருக்கும் நகரத் திட்டங்களைப் பற்றி அறிந்து கொள்ளவும் மற்றும் உள்நாட்டில் மாற்றத்தை ஊக்குவிக்கவும் வாய்ப்பளிக்கிறது. கடந்த ஆண்டுகளில் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம், மேலும் இந்த ஆண்டு நிகழ்ச்சியின் மூலம் நமது குடியிருப்பாளர்களுடன் மீண்டும் ஈடுபாடு கொள்ள ஆவலுடன் காத்திருக்கிறோம்."

*- பால் மோர்ரிஸன், இடைக்கால தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca